# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்

# றொம்மன் வளாகம்

## ஐப்பசி மாதாந்தப் பாடத்திட்டம்

## 2023 - 2024

## வகுப்பு 11

அரையாண்டு கற்பித்தல் வாரங்கள் 15

பாடம் 3 : **ஒரு தோழனின் காதற்கடிதம்**

**கற்பித்தல் காலம்: 3 வாரங்கள்**

| | |
|---|---|
| அடைவு | மாணவர்கள் இலக்கியச் சுவை பற்றியும் கவிஞர்கள் பற்றியும் பாடல் கருத்து விளங்கிக் கொள்வது பற்றியும் கற்றுக் கொள்வார்கள்.<br><br>இலக்கணம்: சொல்லிய உறுப்புகள் பற்றியும் வினையாலணையும் பெயர் பற்றியும் மாணவர் அறிந்து கொள்வர்.<br>சுருக்கம் எழுதுதல் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்வர். |
| துணைக்கருவிகள் | உழைப்பாளிகள் பற்றி காட்சிப்படுத்தல்<br><br>இலக்கணம் -காட்சிப்படுத்தல், சொல்லட்டைகள் |
| செயற்பாடு | காட்சிப்படுத்தல்<br><br>குழுச்செயற்பாடு, ஒப்படை |
| **வாரம் 40**<br><br>**08.10.2023** | **இலையுதிர்கால விடுமுறை** |
| **வாரம் 41**<br><br>**15.10.2023** | **ஒரு தோழனின் காதற் கடிதம்** |
| | **கலந்துரையாடுவோம்:** இணைந்த செயற்பாடு<br><br>பாடநூலிலுள்ள காட்சியை மையப்படுத்திக் கதைத்தல். (உழைப்பாளிகள் சிலை)<br><br>**பாடவிளக்கம்**<br><br>• பாடத்தலைப்பு சார்ந்து காட்சிப்படுத்திக் கலந்துரையாடல்.<br>• புதுவை இரத்தினதுரை பற்றியும் அவர் எழுதிய நூல்கள் பற்றியும் கூறக் கேட்டல். |

| | |
|---|---|
| | • போராட்ட வரலாறு பற்றி ஆசிரியர் தயாரித்த வினாக்களின் ஊடாக கலந்துரையாடி,,அதன் பின்னர் பாடத் தலைப்புக்குச் செல்லுதல்.<br>• **புதிய சொற்களை** எழுதுபலகையில் எழுதிக், கலந்துரையாடல்.<br>• காட்சிப்படுத்தல் மூலம் விளக்கமளித்தல்.<br>• ஆசிரியர் பாடலை வாசித்து, சுருக்கமாக விளக்கம் கொடுத்தல்.<br><br>**குழுச் செயற்பாடு - இணைந்த செயற்பாடு**<br><br>வினாக்களுக்கு விடைகளைக் கண்டறிந்து, சரிபார்த்து எழுதுதல்.<br><br>**செயல்நூல்:** செயல் 2 ஆசிரியர் துணையுடன் சுருக்கம் எழுதுதல். ஆண்டு 10 இல் கற்றதை மீட்டல் செய்தல்.(பாடம் 4)<br><br>• மாணவர் உரத்து வாசித்தல்.<br><br>**விளையாட்டு:** Kahoot விளையாடுதல் |
| வீட்டுவேலை | வாசிப்பு,<br><br>வினாக்களுக்கான விடை எழுதுதல். |
| **வாரம் 42** | **பாடம் 3 ஒரு தோழனின் காதற்கடிதம் தொடர்ச்சி** |
| 22.10.23 | **மீட்டல்:**<br>வினாக்கள் மூலம் பாட விளக்கத்தைத் தெரிந்து கொள்ளுதல்.<br><br>❖ தகவல் பெட்டகம் - நூலாசிரியர்கள்<br>ஆசிரியர் தகவல் பெட்டகம் பற்றிய விளக்கத்தைக் கொடுத்து, அதன் அகத்தியத்தை விளக்குதல்<br><br>செயற்பாடு : தலைப்பை விளக்குதல். இரு நூற்றாண்டுகளுக்கு முன்பும் இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பும் எழுத்தாளர்களின் சிந்தனை பற்றிக் கலந்துரையாடுதல்.<br><br>(கேட்டல், பேசுதல், வாசித்தல்) |

| | |
|---|---|
| | **குழுச் செயற்பாடு - இணைந்த செயற்பாடு**<br>செயல் 3: நாடகம் உருவாக்குவது பற்றி ஆசிரியர், மாணவர் கலந்துரையாடுவர்.(பேசுதல்)<br>செயல் 6: **சிறுகதை ஆக்கம்**<br>வகுப்பில் மாணவருடன் சேர்ந்து சொல்லியங்கள் அமைத்துச் சிறுகதை எழுதுதல்.(பொழுது விடிந்தது)<br>(பேசுதல், எழுதுதல்<br>விளையாட்டு: Kahoot விளையாடுதல் (அலகு 3)<br>**23.10-23 திங்கட்கிழமை 17.30 மணிக்கு நவராத்திரிவிழா நடைபெறும்.** |
| வீட்டுவேலை | வாசிப்பு |
| **வாரம் 43** | **பாடம் 3 ஒரு தோழனின் காதற் கடிதம் தொடர்ச்சி** |
| 29.10.23 | **மீட்டல்:**:வினாக்கள் மூலம் பாட விளக்கத்தைத் தெரிந்து கொள்ளுதல்.<br>**இலக்கணம்: சொல்லிய உறுப்புகள், வினையாலணையும் பெயர்**<br>➢ எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் பற்றி விளக்குதல்.<br>➢ கருத்து தொடங்கும் இடம், கருத்து முடியும் இடம், செயலுக்கு உட்படுத்தப்படும் பொருள் என்பதை உதாரணங்களுடன் விளக்குதல்.<br>➢ வினையாலணையும் பெயர் காலம் காட்டும், வேற்றுமை உருபேற்கும், மூவிடங்களிலும் வரும்,எதிர்மறைப் பொருளில் வரும் என விளக்குதல்.<br>**செயல்நூல்:** செயல் 1, செயல் 4 மாணவருடன் சேர்ந்து வகுப்பில் செய்தல்.<br>**குழுச் செயற்பாடு - இணைந்த செயற்பாடு**<br>பேசுவோம்:செயல் 5: இருபண்பாட்டு வாழ்க்கைமுறை பற்றி ஆசிரியர், மாணவர் கலந்துரையாடுவர். |

| | |
|---|---|
| | கேட்டலும் பேசுதலும் |
| வீட்டுவேலை | மதிப்பீடு – அலகு 1,2,3 – மீட்டல் செய்தல்: |
| | |